

"பல கனிகள்!"
இதழ் ௧
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா
संत जनाबाई

# “பல கனிகள்”!

## இதழ் 1

# பொருளடக்கம்


1. ஸ்ரீ பிரம்மதேவன்----------------------------------------------௨

௨. ஸ்ரீமந் நாராயணன்--------------------------------------------6

௩. ஸ்ரீ சிவபெருமான்---------------------------------------------௯

௪. கலியின் நியதியின் விதி--------------------------------------௩0


எல்லாம் நீ!



(ஸத்திய வாக்கை) 1

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைவரும்"!

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"! "நம்பினோர் கெடுவதில்லை"!
"தெய்வம் மனுஷ்யானாம்"! "யத்பாவம் தத் பவதி"!
"ஸ்ரீ ராம், ஜெய ராம், ஜெய ஜெயராம், ஓம்"!
"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்"!
"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை"!

சர்வார்ப்பணம்:- கலி தோஷ கோர குணங்களை நாசம் பண்ணும்! நாம ரூபங்களை செயல் இழக்க பண்ணும்! சொந்த, பந்த, பாச, உறவுகளை நாசம் செய்யும்! சாட்சி நிலையை கூட்டி வைக்கும்! ஏக குணத்துடன் உன்னை இணைக்கும்!

பிரம்மார்ப்பணம்:- நாம ரூபங்களை மண் ஆக்கும்! அதிசய பந்துக்களில் பசு! பதி! பாசங்களை நாசம் செய்யும்! சர்வ சாட்சி நிலையை கூட்டி வைக்கும்! நிர்க்குணமாக்கும்! ஜீவன் முக்தியில் நிலைபெறச் செய்யும். ஜீவ கர்த்தத்துவத்தையும், ஈச கர்த்தத்துவத்தையும், நாசம் செய்யும்!

**எல்லாம் ஒன்றே! அதுவே நான்! நாமே அது!** என ஆக்கி விட்டு மறைந்து விடும்!



# "பல கனிகள்"!

## 1) "ஸ்ரீ பிரம்ம தேவன்!"

இவன் சிருஷ்டி கர்த்தா ஆகும். எப்படி என்றால்? இவன் ஜீவ நிலையில் தான்! சிருஷ்டி கர்த்தா ஆகும். இவன் **"ஞான நிலையில் ஸத்குரு"** ஆகும். இவன் ஜீவ நிலையில் **"புத்தி"** ஆவான். நமக்கு ஸ்ரீ ஸத்குருவே, காரணம். என்ன வென்றால்? இவன் **"தோற்றமும்! மறைவும்"** இல்லாதவன் ஆகும். **"இருப்பு ஒன்றே"** உடையவன் ஆகும். காலாதீத **"பரமம்"** இருப்பு ஒன்றே உடையதாகும். ஆகவே இவன் பரஅம்ஸ ஸத்குரு ஆகும்.



வேதங்கள் ஒன்றாக கொடுத்தவர், ஸ்ரீ பிரம்மதேவனாகும். அது முன் மூன்று யுகங்களிலும் ஒன்றாகவே இருந்தது. கலியுகத்திற்கென்றே அவ்வேதங்களை பிரித்து தொகுத்து கொடுத்தவர் ஸ்ரீ வேத வியாசர் ஆகும்.

ஜீவநிலையில், சிருஷ்டி கர்த்தாவாக, இருக்கும் நிலையில், இவன் **"தெய்வம்"** ஆகும். இவன் தெய்வ நிலையில், சிருஷ்டி கர்த்தா ஆகும் நிலையில், **"நான்கு சிரங்கள்"** கொண்டவனாக கருதப்படுகிறான். இந்த நான்கு சிரங்களும், நான்கு **"திசைகளையும்"** கண்காணிப்பதாகவும், நான்கு சிரங்களும், சிருஷ்டியின் ஆதாரமாக இருப்பதால், நான்கு **"வேதங்கள்"** உடையவனாதலால், **"சதுர்முகன்"** (சதுர்வேதன்) என்றும், அழைக்கலாம். இந்த நான்கு வேதங்களும், ஜீவர்களுக்கானதாகும்.



கலியுக மக்கள்
உய்வடைவதற்
காகவே நான்கு வேதங்
களாகவும், அதன் அடிப்
படையில் பிராமண,
க்ஷத்திரிய, வைஸ்ய,
சூத்திரர், என்ற நான்
கு வர்ணாஸ்ரமமும்,
உலக நன்மைக்காக பிரித்து வாழ வழி
வகுத்து கொடுத்தார் ஸ்ரீ வியாச பிரான்.

இந்த சதுர்முகன் மேல் இருப்பு ஸ்தானத்தில்,
பரசொரூப அம்ஸமாகிய, "ஆதி
சிவமாகவும்", அடுத்து இருக்கும்,
"மஹேசனாகவும்", கருதப்
படுவதால், இவர்கள் அம்ஸமாக,
"வேதாந்த கருத்தாகிய",
நான்கு மஹாவாக்கியமும்,
தோன்றியதாக, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
இதுவே ஆதிமூலப்பொருள் ஆகும்.
முன்பே, இவன் ஜீவ நிலையில், தெய்வம்
ஆனவன் என்றும், சிருஷ்டி கர்த்தா
என்றும், சொன்னோம். அந்த நிலையில்
ஜீவ நிலையில் புத்தியை உடையவன்



ஆறவ் அவை கவி (5)
தோஷ தோற துணை
ங்களில் சிக்குண்டு
ஒன்ற பின்மையாத
ஒதறுண்டு அழிவு
பாதையை நோக்கி
வெகு வேகமாக போய்க்
கொண்டிருக்கிறது. இதுயாருக்கும் குற்றமில்லை.
கவி தோஷம் இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற விதியாகும்.

என்றும், சொன்னேம். இவன் புத்தியின், அதி தேவதை ஆவான். இப்புத்தியானது, "மனதின்" அடுத்த நிலையாகும். இம் மனதின், அதி தேவதை, "சந்திரன்" ஆவான்

குறிப்பு:— சந்திரன் வளரும், தேயும், அதை போல், மனமும் வளரும், தேயும், அதாவது நினைப்பும் மறப்பும், உடையதாகும். புத்தியானது, இறை & குரு கிருபையினால், உறுதி நிச்சயம் ஆனால், அப்புத்தியே, "அறிவு" ஆகப்பிரகாசிக்கவும்முடியும். அப்புத்தியானது, மனதோடு இணைந்து "கற்பனை" செய்தால் அதுவே "நாமரூப" ஜகஜீவ, பொருள் தோற்றமும் வருகிறது. என, ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்வி.



ஓர் நிலையில் சொல்லும் போது வேதம் ஸ்ரீபகவானின் மூச்சு காற்று என்றும், வேதாந்த நான்கு மஹா வாக்கியங்களும் ஆதி மஹாத்மா மஹாத்மாக்களின் ஸ்வய அநுபவம் என்றும் ஸ்ரீமஹான்கள் சொல்வர். 6

ஆகவே, நம் நிலைக்கு இந்த பிரம்ம தேவன்!
"தெய்வம்" அல்லது "ஸத்குரு" ஆகும்.

ஓ "ஸ்ரீமந் நாராயணன்"!
இவன் "பரிபாலனம்" (காக்கும் தொழில்)
உடையவன் ஆகும். எப்படி என்றால் ஜீவ நிலையில் நான்,
இவன் பரிபாலன கர்த்தா ஆகும். இவன்
"ஞான நிலையில் ஸத்குரு" ஆகும்.
இவன் ஜீவ நிலையில் "சித்தம்" என ஆவான்.
நமக்கு இவனும் ஸ்ரீ ஸத்குருவே. காரணம் என்ன
வென்றால்? இவனும் "தோற்றமும்
மறைவும்" இல்லாதவன் ஆகும்.
"இருப்பு ஒன்றே" உடையவன் ஆகும்.
காலாதீத "பரமம்" இருப்பு ஒன்றே உடையதாகும்.



ஆதிஸ்ரீவசநாசிவம் (7)

மகேசனின்
அம்சமே ஆதி
மஹாந்தான ஸ்ரீமஹாக்
மாக்கள் என்றும்
அவர்களும் தாவக்க
ஒன்றாக இருப்பதால்
அவர்கள் வேதாந்த
சுத்த அத்வைத ஸ்தாபகர்கள் எனச்சொல்லலாம்


ஆகவே இவன், பரம் அம்ஸ ஸத் குரு ஆகும் என உணர வேண்டும். ஆனால்? "இவன், ஜீவ நிலையில்; காக்கும் "**தெய்வம்**" என ஆகிறான். மேலும் ஓர் உண்மை என்ன வென்றால்? சிருஷ்டி என்ற உற்பத்திக்கு, அதிக "**திறமை**" வேண்டாம். அவைகளை, சிரத்தையுடன், பாதுகாப்பதற்கு அதிக திறமை வேண்டும். இவர்களுக்கு, இவர்களுடைய, "**நிழலாகிய லோக மாயா**" உறுதுணையாக இருக்கிறது. இந்த மாயா வானது, ஸ்ரீபிரம்ம தேவனைவிட, ஸ்ரீமந் நாராயணனிடம், "**அதிகம்**" விளையாடும். இவனை நம் முன்னோர், "**மாயாவி**" (மாயையே வடிவமாக உடையவன்) என அழைப்பர். முன்பே இவன், ஜீவ நிலையில் தெய்வம் என்றும், பரிபாலனம் செய்யும்



ஸத்! ஸித்! ஆனந்தம்! எனச் சொல்வதில் ஸத்! எதையும் அசையாத அசைக்காத இருப்பு ஸ்தானத்தை மட்டும் குறிக்கும். ஸித் என்றால் அசையக் கூடியதாகும் என மட்டும் உணர வேண்டும் [illegible].

கர்த்தா! என்றும் சொன்னோம் ஜீவநிலையில் சித்தத்தை உடையவன், என்றும் சொன்னோம். இவனே, சித்தத்தின் "**அதிதேவதை**"யாகவும் இருக்கிறான். இந்த சித்தமானது, மாயா வினை, உடையதாக இருப்பதால், பிரம்மனால், உண்டாக்கப்பட்ட "**நாம ரூப**" பொருள்களெல்லாம், அழகு, கவர்ச்சி, வசீகரம், ஓர் மோஹம், சுவை, உள்ளதாக மாற்றி, இச் ஜீவர்களுக்கு, "**மாயாக மனம்**" ஜீவமாக, தீராத ஓர் "**மோஹவெறியை**" உண்டு பண்ணுவது, இவன் சிறப்பு அம்ஸமாகும்.


குறிப்பு:— மேலே சொன்னபடி சிருஷ்டி செய்தாலும்; இந்த மோஹ வெறி, மாயா உடையதல்ல. இந்த மோஹவெறி, மனதுடையதேயாகும். என உணர வேண்டும்.





ஆனாலும், நம் நிலைக்கு இந்த ஸ்ரீமந் நாராயணன் "தெய்வம்"! அல்ல. "ஸ்ரீ ஸத்குருவே"! ஆகும்.

௩ "ஸ்ரீ சிவபெருமான்"!

இவனை, ஸம்ஹாரகர்த்தா எனச் சொல்வர். ஆனல் இவன் தொழில், "மாற்றம் & மறைப்பு"! என்ற நிலையில், பழையனவற்றை அழித்து, புதியன ஆக்குதலாகும். இவை "வினை & விதி"! யின்படி, நிகழ்வதாகும். இவற்றின் மூலதனம், "அஹங்கார & மமஹாரம்"! ஆகும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர். இவ்விரண்டிலும், அதிகாரம்! ஆதிக்கம்! உடைமை & உரிமை! போட்டி & பொறாமை!




மானம் & அவமானம்! வெட்கம்! சூடு! சுரணை! வஜ்ஜை! இவை அனைத்தும், இந்த "**ஸம்ஹாரத்தில்!**" அடங்கும் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். இவன் ஸம்கார கர்த்தா நிலையில், ஜீவ நிலையில், பயர்படுகிறான். ஆகவே இவன், ஜீவ நிலையில் **தெய்வம்** என, ஆகிவிடுகிறான். ஆனால் நம் ஞான நிலையில், "**ஸ்ரீஸத்குரு!**" ஆகும். இவன் ஜீவ நிலையில் "**அஹங்கார!**" சொரூபி என, அழைக்கப்படுகிறான். இவனும் "**தோற்றமும்! மறைவும்**" இல்லாதவனாகும். ஆகவே இவன் "**பர**" அம்ஸமான, ஸத்குருவே ஆகும்.



ஸ்வய ஞானுபவ (11)
நூலில் கூறும்
நிலையில் ஹயன்!
ஹரி! ஹரன்! என
கூறும் பிரம்மனும்!
நாராயணனும்!
சிவபெருமானும்!
ஸத்தாகிய இருப்பை!

மட்டும் உடையவர்களாகவும், அவர்கள் எறும்பு போன்று எந்த இயக்கமும் இல்லாதவர்களாகவும் தொடரும்.


இவனிடம், "விஷேச"! "அம்சம், ஒன்றுண்டு என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர். அதாவது, இவன் "நெற்றிக்கண்"! (கண்கள் அல்ல) உடையவனாகும். அக்கண் "அறிவுக்கண்"! ஆகும் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். முன் கூறிய நிலையில், அஹங்கார மமகாரம்! இருந்தாலே, அது "அஞ்ஞானம்"! என்னும், அறியாமை (கவனக் குறைவு) ஆகும். இதை நிவர்த்தி செய்ய, ஞானம் என்னும், அறிவு தேவை. இந்த அறிவு, ஆரம்ப ஜீவ நிலையில், "ஜீவ" கர்த்தத்துவத்தை! விட்டு "ஈச" கர்த்தத்துவத்தை! ஏற்கும் நிலையாகும். இந்த அறிவே, அத்வைத ஞானத்தின், அடிப்படை ஆகும்.



அம்மூவரும் எந்த இயக்கமும் இல்லாத தன்மையினை அவர்களே இல்லை என்று சொல்வதே ஸத்யமாகும். அந்த காலாதீத பரம் இல்லையானால் இருப்பே இல்லை என்பதே உண்மை. அதே போல் அதன் நிழலாகிய மாயா இல்லையானால் நாமரூப ஜகஜீவ தோற்றம் இல்லை 12

நாடகம்

இவன் "ஆடல் அரசன்" என்றும் சொல்வர். இவன் அணிவதோ, "திருநீறு" எனச் சொல்லும், மனித உடலெரித்த "சாம்பல் பொடி" ஆகும். இதன் கருத்து, முடி சூடி வாழ்ந்த மன்னரும் முடிவில் பிடி சாம்பல் ஆவர்! என்னும் பெரும், கருத்தை உடையதாகும். சாம்பல் என்பது, பொடி ஆகும். அப்பொடி "ஜீவ" அணுவாகும். ஜீவ அணுவே ஆத்மா ஆகும். ஆத்மாவே பரமாத்மா! பரமாத்மாவே பரப்பிரம்மம் ஆகும். இந்த சாம்பல் பொடியானது, தூய "பால் போன்ற வெண்மை" ஆகும். அவ்வெண்மையே, காலாதீத, பர சொரூப அம்சம் ஆகும்.



அதே போலவே மாயாவின் மையந்தாகிய மனம் இல்லையானால் எந்த இயக்கமும். இந்த

**காரசார**

விளையாட்டே இல்லை என்பதே உண்மையாகும். நம்மை பரமாக உணர்ந்து கொண்டால் மாயாவும் மனமும் இல்லையென்பதே உண்மை முடிந்துவிடும்

ஆடல் அரசன் என்றால்? அது ஓர் "**தலைத்**" நிலையில் ஆனந்த நடனம் ஆகும். எப்படி என்றால்? "**ஆத்மா & பரமாத்மாவின்**" ஆனந்த நடனம் ஆகும்.

இதன் ரகஸியம் என்னவென்றால்?

ஆத்மாவை "**மனம்**" மூடிய தன்மையினை, "**ஜீவாத்மா**" என ஆனான். அங்கு பரமாத்மா வானவன் ஸ்ரீபகவான் நிலையில் "**சாட்சி**" யாக இருக்கிறான். ஜீவ போர்வை என்ற, "**நாமரூபத்தை**" களைந்தெறிந்த தன்மையினை, ஆத்மாவானவன், பரமாத்மா என்ற ஸ்ரீபகவான் தம்மோடு, இணைத்துக் கொண்டு, ஆனந்த நடனம் செய்கிறான். இங்கு ஸ்ரீபகவானானவன், "ஆடல் அரசன்" எனக்கொள்ள வேண்டும்.




ஸ்ரீசிவபெருமான்
செய்யும் சம்ஹார
மாற்றம் & மறைவு!
எப்படி நிகழ்கிறது
என்றால்? வினையும்!
விதியும்! மாறுவதில்லை
மனிதனுக்கு. ஆனால்
நாமரூபம் மட்டும் மாறும்! மறையும்!
தொடரும்

நாமரூபங்களைத் தெரிந்த பக்தனை ஆன்மா
"வெண்ணீறு!" எனக்கொள்ள வேண்டும்.
இதுவே ஸ்ரீசிவபெருமானுக்கு உள்ள சிறப்பாகும்.
நெற்றிக்கண்:- மனக்கண்கள் "நாம
ரூபத்தை!" சுவைக்கும் கற்பனையால்.
ஆனால் நெற்றிக்கண் என்ற "ஒற்றைக்கண்!"
அத்வைத நிலையில், நாமரூபத்தை கெடுக்கும்.
இவனை மனக்கண்களோடு பார்த்தால், சம்ஹார
கர்த்தா நிலையில், ஓர் தெய்வம் ஆகும்.
இவனே, அறிவுக் கண்ணோடு உணர்ந்தால் இவன்
தெய்வம் இல்லை என்றும், கர்த்தா இல்லை என்றும்
இவன் ஸம்ஹார தொழில் உடையவனல்ல என்றும்
"ஸ்ரீசிவபெருமானும்!" நம் நிலைக்கு,
ஓர் "ஸ்ரீபாதகுருவே!" என்றும் கொள்ளலாம்.
இவன் நம் நிலையில் தெய்வம் அல்ல என்பதே ஸத்தியம்.



இப்படி நாமரூபம் (15)
மட்டும் மாறி
மறைவதையே
பழையன கழிதலும்)
புதியன புகுதலும்!
ஆகும். ஆகவே தான்
ஓர் மாயா பிரபஞ்சம்
ஜாலமாக விளங்குவதும்
ஒருங்காக
நடியும்! பின்னும்! மனம் இல்லாமல்
அமைகிறது. ஆனால் அவ்வும் அனுபவமோ இன்றி
பிறப்பு பெருக்கமோ! பின் முடிந்ததும்.

மேலே கூறிய "மூவரும்!" தம் நிழலா
கிய "மாயா!" வினாலேயே, துலங்கப்படுகி
றார்கள்! விளங்கப்படுகிறார்கள்! பிரபல்யம்
அடைகிறார்கள். ஆனால் இவர்கள் "எலும்
பு" போன்று, இயக்கம் இல்லாத "இருப்
பை" மட்டும், உடையவர்களாகும். அங்கு
மாயாவானது மாம்சம்! கொழுப்பு! குருதி!
போன்று, இருப்பும் இயக்கமும் உடையதாகும்.
இம்மூவரும், மூன்றையே, ஓம் நமோ பிரம்ம
தேவாய! ஓம் நமோ நாராயணாய!
ஓம் நம சிவாய! என்னும் "மந்திர"
மயமானவர்கள். சூட்சும "ஞானம்"!
மட்டும், உடையவர்கள். மெய்யன்பர்களின்
(மனத்தகமான மஹாத்மாவானவர்கள்) அறிவு
திறனில்!" தோன்றக்கூடியவர்களாகும் ண
(துறைமையில்)




இந்த ஆடல் அரசனுக்கு (16ஆ) திவ்ய சபேசன் என் நிஜயில் ஓர் நாமம் உண்டு. அதாவது, "நடராஜன்!" என்பார் ஸ்ரீ மஹான்கள்.

இதில் ஓர் மாபெரும் ரகஸியமே மறைந்து இருக்கிறது. தொடரும்

நெற்றிக்கண்:- இது அக்கினியை கக்கும் கண் அல்ல. இது ஒருபொருளையோ! ஒரு ஜீவனையோ! எரிக்கும் கண் அல்ல. நம் "புராணப் பொய்" கதையில், வருவதைப் போல், புலவர் நக்கீரனை! எரித்த கண்ணுமல்ல. எரிக்கும் கண்ணுமல்ல. புலவர் நக்கீரனை! எரித்தது நம் ஸ்ரீ சிவ பெருமானின் "தபாக்கினி!" ஆகும்.

இந்த நெற்றிக் கண்! "திருஷ்டி"! யின் (பார்வையின்) "சிருஷ்டி" யின் கண்ணாகும். இது "ஞானகண் முருகன்!" தோன்றிய (தோற்று வித்த) "அறிவுக் கண்!" ஆகும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.





நட+ராஜா = நடராஜா ஆகும். (17)

இங்கு நடை பயிலும் பாடம் நடைபெறுகிறது. இருபாதமும் ஊன்றி நின்றால், அது நிற்றல் ஆகும். இருபாதமும் ஒருகாலு தரையில் மேலே தூக்கவோ நிற்கவோ முடியாது. ஒருபாதம் ஆழியிலும்; தொடரும்.

ஸ்ரீ சிவபெருமான், அஹங்கார சொரூபி என்றால் :— சிவபெருமானும், மற்றும் இருவரும் "பேரறிவு" ஆனவர்களே.

அம்மூவரும், தொழில் நிமித்தமாகவே, "அறிவுக்கு" இறங்கிவருகிறார்கள் எனக் கொள்ளல் வேண்டும். ஆனால் இங்கு நம் பெருமானுக்கு "இரு" தொழில்கள், கொடுக்கப்படுகின்றன.

(A) "பழையனை மறைத்தல்,"

(B) அதே "விதி"யின்படியும், அதேவின் யின் நிலைக்கும், ஏற்றவாறு "புதியன உருவாக்குதல்," எனஇரண்டாகும்.

இந்த மறைத்தலுக்கும், உருவாக்குவதற்கும், "மாயா"வும், அவள்மகனை,




ஒருபாதம் ஆகாயத்திலும் மாறிமாறி (18) வைத்தால்தான் நாம் நடக்க முடியும். அந்த இடத்தை கடக்கவும் முடியும். குறிப்பிட்ட இடத்தை அடையவும் முடியும். நாம் நடக்காமல் வழி தொலையாது. தொடரும்

மணமும்! தேவைப்படுகிறது. இந்த மணம்! இவனுக்கு ஏன் தேவைப்படுகிறது என்றால்? மணம் படைத்த "மணிதனுக்காக!" தேவைப்படுகிறது. இதில் ஓர் உண்மை என்னவென்றால்?

(A) நான்! என்றல்! எனது! என்ற மூன்றும் "பதிந்த!" நிலையில் மணிதனுக்கும்;

(B) நான்! என்றல்! எனது! என்ற மூன்றும்; "பாவை!" நிலையில் எம்பெருமானுக்கும்; நிலை கண்டு, இடம் பெறுகிறது என உணர்க.

அஹங்கார, மமகாரம் பதிந்த மணிதன்! "சமர்ப்பணம்!" என ஒன்றால் ஸ்ரீ பகவானிடம்! அர்ப்பணம் செய்து விட்டால் போதும். அங்கு உன் சாதனையை அனுசரித்து



இதைத்தான் கால் மாறி ஆடும் என ஸ்ரீ மஹான்கள் கூறுவர். 19
ஒருபாதம் தன்னைத் தூக்கி ஒருபாதம் தன்னை மாற்றி. இரு பாதமும் ஆடினால். வழி தொலையும். நாம் வழி கடந்து குறிப்பிட்ட இடத்தை ஜீவன் முக்தியை அடையமுடியும். முடிந்தது.

அந்த சர்வார்ப்பணமானது, பதிந்த நிலையில் இருந்து "பாவனை" நிலைக்கு, இயல்பாக மாறி பின் "பாவனைதீதநிலைக்கு" இட்டுச் சென்று விடும். இங்கு?

பதிந்த நிலை மனமாகவும், பாவனை நிலை அறிவாகவும், பாவனை தீத நிலை பேரறிவாகவும், மாறிவிடும் என ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம். ஆகவே, இங்கு நம் ஸ்ரீ சிவ பெருமானுக்கு, பாவனை நிலையில் "மனம் இது அறிவான நிலையே!" உண்டு என்பது, "உபசாரவசனமே" உண்மையல்ல.



நெற்றிக்கண் (20)

என்பது **அறிவு**

கண் ஆகும். அது

**ஞானம்** (மலர்ச்சி)

ஆன அபேத திருஷ்டியின் கண்ணை எம் தொடக்கம்.

மேலும் எம் ஸ்ரீமாணிக்க வாசகர் தம் பாடலில் கூறும் போது:- **"போக்கும் வரவும் புணர்வும் இல்லாத புண்ணியனே"!!!**

போனதும் இல்லை, வந்ததும் இல்லை! என்றார்.

ஹேபாபா! தாங்கள் கூறும், நெற்றிக் கண் விபரத்தை நாங்கள், தலை வணங்கி ஏற்கிறோம். ஆனால்?

**"திரிபுர தகனம்"**! அதாவது, நம் ஸ்ரீ சிவபெருமான்! **"திரிபுரங்களை"**!

பூலோகம்! பித்ரு லோகம்! சொர்க்க லோகம் ஆகியவற்றைத் தம் **"நெற்றிக் கண்ணால்"**!


எரித்ததாக, ஓர் கதை பேசப்படுகிறதே? அது நெற்றிக்கண்ணா? தம் தபாக்கினியா? இதில் உங்கள் **கணிப்பு**" என்ன?



உ

அபேத திருஷ்டியும் (21)
குளிர்ச்சியும்
உடையது என என்
சொல்கிறேன் என்றால்
ஞானக் கனியான எம்
ஸ்ரீ முருகன் தோன்றியதும்
அதே கண் ஒளியாகும்
தொடர்ந்து
இதை உணரவும்.

ஹே அறிவுக் குழந்தாய்! கவனமாக கேள்:
"எம் பெருமானாகவும்!"
லோககுரு "தக்ஷிணாமூர்த்தி!
யாகவும்! இருந்து வெளியிட்ட, ஓர் உண்மை.
ஸ்ரீ ஸத்குரு:— ஹே அறிவான குழந்தாய்,, பாபா!
திரிபுர தகனம் என்பது "புராண! வாய்மொழி
பொய் கதை கேட்கும் குழந்தைகளுக்காக சொல்லும்
பொழுது போக்கும் "கதை":— யாம் கடும்
தவஸ் கோலம் பூண்டிருந்த சமயம், எம் தவத்தை
கலைக்கும் நிமித்தமாக "ரதி மன்மதன்"!
ஆகிய இருவரையும், தேவர்கள் அனுப்பி வைத்
தார்களாம். அவ்விருவரும் "காமமோஹ
சொரூபர்களாம். அவ்விருவரும் எமக்கு "காம"
தீயை! உண்டாக்கும், மன்மத பாணத்தை!



ஸாந்தியம் (22)
கணவின் ஞான ஒளிம் பொருந்தியவனே ஞான முருகனுக்கும். இச்சையையும் (எண்ணத்தையும்) கிரிகையை யும் (செய்கையையும்) அபேத நிலையில் ஞானம் ஆக்கியவன் எம் முருகனுக்கும். அக்குணார்ந்த பொறிகளோ சரவணப் பொய் கையில் போய் ஆறுமுகன் தோன்றினன் தொடரும்

எம்மீது ஏவினர்களாம். யாம் வெகுண்டெழுந்து ஆக்கிரத்தில், அவ் இருவரையும், அவர்கள் சஞ்சாரம் செய்யும், மேலே சொன்ன திரி லோகங்களையும் எம் "நெற்றிக்கண்ணை" திறந்து, சுட்டெரித்து பஸ்பமாக்கி விட்டோமாம். பிறகு தேவர்கள் பணிந்து, வேண்ட, திரிலோகத்தையும் ரதிமன்மதனையும்! திரும்பவும் உண்டாக்கியதாக, இன்னும் கதை, "மெருகேற்றி" புதுபுது வர்ணனைகளுடன் கதை கதையாக பேசி மகிழ்விப்பதாக கேள்விப்படுகிறேம். ஏன்பாபா! உனக்கு இந்த கதை போதுமா? அந்தக் கதையும் வேண்டுமோ?

வைத்தியம்:- ஓம் ஐயனே! அழகான கையனே! கதையும் கருத்தும்! எம் குழந்தைகளுக்கு தேவை, அதையும் சொல்லி விடுங்கள்.




புராணப் பொய்களை
களை மெருகேற்றி ②

அதுபோலவும் அழகை
சொன்னதே யாருடைய
வேறொன்றுமில்லை
எம்பெருமானுடைய
தபாக்கினியாலது

சுட்டெரிக்கும் வல்லமை
உள்ளத்தில் உணர வேண்டும். முடிந்ததும்
ஞானக்கண் திறக்கும்.

ஸ்ரீ ஸத்குரு:— அப்படியானால், இது அந்தக் கதையல்ல. அந்த **ஒன்றின்** கருத்தாகும். **யாம்** தியான மூர்த்தியாக, அந்த ஒன்றில் லயமான சமயம், கடந்த ஞானியரும் நடப்பரோ மக்கள் மேல் காதல். அதாவது **அன்பு** (இறை உணர்வு) **பாசம்** (ஜக உணர்ச்சி) நம் இறைவனிடம், அன்பு இருக்கிறதா? அல்லது பாசம் இருக்கிறதா? **அறிவா? மனமா?** என ஓர் பரீட்சை, நடந்தது. நாமரூப "**ஆவரண**" மயக்கம், போலும்? பக்குவ ஆன்மாக்களின் பாடத்திற்காக மயக்க வந்தது. அங்கு எம் **அறிவுக் கண்ணை**" மட்டும் திறந்தோம். அதாவது இருப்பது ஒன்றே, நடப்பது நலமே, என,



மரத்தை அசை (24)
க்கின்ற காற்றை
போல தாவத்தை
ஆசையென்ற காற்று
அசைக்கிறது.
ஆசை அடங்கினால்
சுவாசக் காற்று அடங்கும். தொடரும்.

# "சும்மாவே" "சுகமாக" இருந்தோம்.

மனக் கண்களுக்கு, பூலோகம், பித்ருலோகம், சொர்க்கலோகம், எனச் "சொல்லும்" திரிலோகம் "**கற்பனையால்**" உண்டு.

அறிவுக் கண்ணுக்கு, எந்த நாமரூப, ஜகஜீவ, தோற்றமும் இல்லையென்பதே ஸத்தியம்.

## உட் கருத்து.

ஸ்ரீசிவபெருமானால் திரிபுர தகனம் நடந்ததாகவும், அவைகளை நெற்றிக் கண்ணால், எரித்ததாகவும் கூறப்படுவது, புராணப் பொய்க்கதை!

மனக்கண்களை மூடி அறிவுக் கண்ணைத் திறந்து, எல்லாம் ஒன்றே! அது பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என சும்மா சுகமாயிருப்பது! உண்மையின் உணர்வு.



சுவாசக் காற்று (25)

அடங்கினால்

ஆசையும் அடங்கி

அழியும். சுவாச பந்தங்களைக்கிறையும் (கட்டுதலையும்) ஆசை அடங்கும்.

ஆசை அடங்கி அழிந்தாலும் நம் சுவாசமும் அடங்கி குறைந்து நின்றுவிடும். முடிந்தது.

(A) ஓர் இடத்தில், ஸ்ரீ சிவபெருமானை சொல்லும் போது,

**காமனை கண்ணால்** எரித்தான் என்றும்,

(B) **காலனை காலால்** உதைத்தான்

என்றும் சொல்வர்.

காமனை ஏன் கண்களால் எரிக்க வில்லை என்றும்,

காலனை சூலத்தால் தாக்கி அவனை அழிக்காமல்,

காலால் உதைத்து ஏன் அழித்தார்? எப்படி

அழிக்க முடியும் என்றும் கேள்வி எழுவாம்?

முன்பே சொன்ன கதை தான் திரும்பவும் உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறோம்.

(A) காமனை கண்ணால் எரித்தார்! கண்களால் எரிக்க வில்லை! காரணம் என்ன?

கண் என்றால், அது "**அறிவுக்கண்**"!



இ நாண்/ரண் (௨௬)

சாமர்த்தியத்திறையும்! என் திறமையாறையும்! கற்றேன் என கிருமாறு திருப்பது பாண்டித்தியத் திமிர் அறியாமையாகும். தொடரும்.

"கண்கள் என்றால் அது மனக்கண்கள்" ஆகும் என உணர வேண்டும்.
வேத திருஷ்டி மனக் கண்கள் ஆகும்.
அவேத திருஷ்டி அறிவுக் கண் ஆகும்.
மனக் கண்களால் "நாமரூப ஜகஜீவ" தோற்றங்கள் உண்டாகி அவைகளின் உடைமையும்! உரிமையும்! கொண்டாட "ஆசை"யும் ("காம"மும்) உண்டாகுமே யன்றி, ஆசையென்ற காமம் கெட்டு அழிந்து நாசமாகாது என உணர வேண்டும். அவேத திருஷ்டியின் அறிவுக் கண்ணானது "நாமரூப ஜகஜீவ" தோற்றங்களின் மண்ணாகவும்! மண்ணாகிய பரமாகவும்! உணருமே யன்றி (காணாது) அதாவது,



ஆறைப் வாய்ஞானம் 27

எப்படி இருக்கும்
என்றால் எல்லாம்
சிவன் செயல்! என்றும்,
நடப்பதெல்லாம் நாரா
யணன் செயல்! என்றும்; தொடரும்.

நாம ரூப, ஜக ஜீவ, தோற்றங்களை,
இல்லை! இல்லை! இல்லை! இல்லை! இல்லை!
என சர்வ நாசம் செய்யும். ஆகவேதான்,
எம்பெருமான்/ கண்களால் எரிக்கவில்லை.
எரிக்க முடியாது.
அறிவுக் கண்ணால் எரித்தார் எரிக்க முடியும்
என உணர்ந்தால் போதும்.
B காலனை காலால் உதைத்து அழித்தார்.
காலனை சூலத்தால், குத்தி அழிக்கவில்லை
இங்கு காலன் என்பது, கால தேவன் அல்ல.
இயம நியம தேவனல்ல எம தர்மனல்ல
தூவத்தின் காலத்தை குறிப்பதாகும்.
முன் பக்கங்களில், நடராஜ நர்த்தனத்தைக்
குறிப்பிட்டு நட + ராஜா = நடராஜா என்றும்,
நடந்தால் தான், வழி தெரியும் என்றும்;
சொன்னோம்.



உ போதிப்பார்கள் (28) ஆறால் தான் சாதிப்பதில்லை இதன் காரணமும் பணம் பட்டம்! பதவி! அந்தஸ்து! கௌரவம் ஆகும். மேலே கூறிய நிலைகளை விட்டால், தொடரும்

இதன் அடுத்த விளக்கம், எப்படி என்றால்?

"காஸ்" என்றால் "ஸ்வாஸ்கள்" அல்ல. (காலாஸ்) "மூச்சுக்காற்று" என்று பொருள்படுகிறது. ஒருவனுடைய, மூச்சு காற்றின், போக்குவரவை! வைத்தே, அவனுடைய, தாவத்தின் காலத்தை சொல்வர், ஸ்ரீமஹான்கள். அதாவது, சுவாச காற்றின், வேகத்தை, குறைத்து, குறைத்து, நிறுத்தினால், தேகத்தின், கால அளவையும், கூட்டலாம். யோகம் & பிராணாயாமம்! மூலமாகவும், சுவாசத்தின், வேகத்தை குறைத்து, நிறுத்தலாம். மற்றொரு மார்க்கம் "சமர்ப்பணம்" ஆகும்.



உலகம் என்ற 29

# இ மதிக்காதே

என்ற அபிமானமாகும்.
அபிமான அந்தஸ்தை
துறக்க எந்த விதியாரும்
விரும்புவதில்லை. அதன் காரணம் ? தொடரும்

இந்த சர்வார்ப்பணமானது, எப்படி அமைகிறது என்றால்? எல்லாம் நீயே! எல்லாம் உனதே! எல்லாம் உன்னால்!

என ஸ்ரீபகவானையே சார்வதால், அவனுக்கு "இருப்பும்" "இயக்கமும்"! "உடைமையும்"! இல்லாமல் போன தன்மையினால் "ஜீவ" இருப்பு இல்லாமையால் "ஆசை"! தோன்ற காரணம் இல்லை.

ஆசை அடங்கி, அழியும் போது "சுவாசமும்"! அடங்கி! அடங்கி! அடங்கி! அடங்கி! நின்று அழிந்து விடும்.

இதுதான் காலம் என்பதை காலத்தால் அதாவது ஆயுள் கால் என்ற சுவாசத்தால், அளப்பதாகும் வெல்வதாகும்.



# நான்! ஏது! 30

என்ற அஹங்கார மமஹாரங்களை விட முடியாததே காரணம் ஆகும் இது கலியுகத்தின் சாமர்த்தியமாகும். ஆகவே இவர்களையும் குற்றம் குறை சொல்லவியலாதும் சொல்லக் கூடாதும் முடிந்ததும்


ஆத்மானந்த குழந்தைகளே! எம்பெருமானிடம்! இந்த கேள்வியை கேட்டோம்:- ஹே நீலகண்டா! நீரணிருகவீவா! திரிநேத்ரா! திரிபுரதகனா! சாம்பவா! சங்கரா! ஹர ஹர மகா தேவா! ஓர் கேள்வி?

இக்கலியுகத்தில், வேத சாஸ்திரம் படித்த பண்டிதர்களும்! வேதாந்திகளும்! "ஸ்ரீபகவத்" சொருபத்தை அறியாதநிலை என்ன?

ஸ்ரீபரமன்:- குழந்தாய் பாபா! நீ எதை ஆதாரமாக வைத்து, இக்கேள்வியை கேட்கிறாய்?

வைத்தியம்:- பக்திக்கதைகளும்! புராணக்கதைகளும்! "சொல்லும் மஹாத்மாக்கள்!" ஸ்ரீபகவானின். வர்ணனையை, விரோதகுரோதமாகவும் காம மோஹ விரகதாபமாகவும், வர்ணனை செய்யும் காரணம் என்ன தேவா?

**அறியாமையா? பாண்டித்யமா?**



(A) படிப்பறிவு:— (31)

1) நிறை கற்றல்.

2) நிறைய விளக்கம் கொடுத்தலும் பெறுதலும்.

3) இறை பக்தியால் பூஜை செய்வதும்! ஆடம்பரம் வியாபாரம்! இல்லாதது.

4) தோஷ நிவர்த்திகளாதாம் வாடாமல் பிறரை வருத்தப்படி போக்கல்.

5) அநியாயம் பேசாமலும் செய்து தர்மம் செய்யாமல் போகுதல் இல்லையாகும். தொட்டும்.

ஸ்ரீ பரமன்:— நன்றாக சொன்னாய் பாபா.

இதை உணர்! பாண்டித்யத்தினால் "அறியாமை"! வளர்கிறது. பின் அறியாமையில் பாண்டித்யம் "விளைகிறது!"

அதனால், அஞ்ஞான மனக் கண்கள் திறக்கிறது. அதனால் "ஞான" அறிவுக் கண் மறைபடுகிறது.

வைத்தியம்:— புரியவில்லையே பிரபோ! சற்று விளக்கி அருளுங்கள்?

ஸ்ரீ பரமன்:— குழந்தாய் பாபா! பாண்டித்யத்தினால் "அகம்" மேலோங்குகிறது. அதனால் "அறம்" மறைபடுகிறது. காரணம் "படிப் பார்வை" காரணம் ஆகும். "அனுபவ" அறிவு, இல்லாததேயாகும்.





(B) அனுபவ அறிவு:-

(1) கற்க வேண்டியதை கற்றபின் அதன்படி நடத்தல்.

(2) கண்டிப்பு! தண்டிப்பு இல்லாமை.

(3) குற்றம் குறை நீங்க கற்றலும். நீக்கக் கற்றலும்.


(4) இறை குரு உணர்வின் முழு சரணாகதி.

(5) பொறுமை! கருணை! பணிவு! கனிவு! இரக்கம்! உருக்கம்! இவைகளைக் கூட அனுபவ நிலையால் சாதித்து போதிக்கவும் முடிந்தது.

வைத்தியம்:- ஹே தயாநிதி! படித்தால் தானே அறிவு மேலோங்கும். எதையும் படிக்காமல் அறிவு எப்படி மேலோங்கும்? அனுபவம் எப்படி கைகூடும்?

ஸ்ரீபரமன்:- இது நல்ல விளக்கமான கேள்விதான்! "**கருங்கல்!** **கற்றபடி நில்!**" என்பதே, உன்போன்ற ஸ்ரீமஹான்களின், அனுபவ வாக்காகும். ஆனால் இன்றைய பண்டிதன்! எத்தனை பாடம் உண்டோ, அவையெல்லாம், நானாபாடம் என படிக்கிறான். பின் "**போதனை**" யாலேயே, காலம் கடத்துகிறான். (கடத்துகிறான்.) அவன் "**சாதனை**" யின், கவனம் இல்லாமல் போய்விடுகிறது.

வைத்தியம்:- ஓம் ஐயனே! அப்படி படிக்காமல், வேறென்ன செய்ய வேணுமென்று சொல்கிறீர்கள்? படித்து அனுபவித்தால் தானே, போதனையும் சாதனையும் கைகூடும்.



இன்றைய கலியுக ஸ்ரீமஹான்களுக்கு (33) ஓர் அசட்டுத் தைரியம் இருக்கிறது. ஸ்ரீபகவானைப் பற்றி எப்படி எழுதினாலும்! சொன்னாலும்! ஸ்ரீபகவான் நேரே வந்து ஏன் என்று கேட்கவா போகிறான். அவன் இவ்வாறு வந்தானே? தெரியும்.

ஸ்ரீபரமன் :— படிக்கப்படிக்க, மேலும் மேலும், படிக்க வேண்டும் என்ற, ஆர்வம் தான், மேலோங்குமே அன்றி, "போதும்" என நிறைவு தோன்றாது. உன் போன்ற, அநுபவ ஸ்ரீமஹான்கள்! என்ன சொல்கிறீர்கள் என்றால்?

"பல" நூல் "சில" காவம் யார். அங்கு உனக்கு, அநுபவம் கொடுக்கும், நூல் ஒன்று தானே வெளிப்படும். பின் அந்த "ஒரு" நூல் "பல" காவம் உணர்ந்து, அநுபவம் கூட்டும் என்பர்.

வைத்தியம் :— ஹே பரம புருஷா! அநுபவ அறிவு! உள்ளவன் எப்படி இருப்பான்? படிப்பறிவு ,, ,, ,,

ஸ்ரீபரமன் :— அநுபவ அறிவு உள்ளவன் எவ்வாறு இருந்தாலும், அடங்கி இருப்பான். படிப்பறிவு உள்ளவன், பெயருக்கும்! புகழுக்கும்! அடிமையாகி, அடங்க மறுப்பான். ஆக்கமேயழுவான்.



34

அருளே நமக்கு
பணம்! பேர்!
புகழ்! பட்டம்! பதவி!
கிடைக்கிறதே. அதை
நம் குடும்பம் பிரம்மம்
இல்லாமல் இன்பமாய்
வாழுமே! அது போதும்.
யார் எங்கே கெட்டால் நம
க்கென்ன? கதை கேட்கும் இவர்களுக்கு
ஸ்ரீபகவானைப் பற்றியோ? பக்தனைப் பற்றியோ?
தொடரும்.

வைத்தியம்:- ஹே பிரபோ! தேவ தெய்வங்களின் "சரிதம்!" பற்றி பேசும் போது, அபவாதமாகவும், அனாசாரமாகவும், அபாண்டமாகவும், அநீதையாகவும், உள்ள நிகழ்ச்சிகளை சொல்லி, தெய்வ "புனிதம்!" கெடும் நிலைக்கு வர்ணனை செய்கிறார்களே, இதன் கருத்து என்ன?

ஸ்ரீ பரமன்:- ஹே பாபா! இவர்கள் பார்வையும், கேட்கும் வாக்கும், சரி இல்லை. சரி இல்லை எனச் சொன்னதின், உட்கருத்து என்னவென்றால்? "கலி, தோடி, வக்ர!" குணங்கள்! இவர்கள் உள்ளத்தில் நிரம்பி வழிவதால், எதைக் கேட்டாலும்! எதைப் பார்த்தாலும்! "இவண்!" உவகையும்! ஜீவர்களையும்! அவர்கள் செயல்களையும் எப்படி "காணுகிறானே!" எப்படி "கேட்கிறானே!" அதை தீய



என்ன தெரியும். என கற்பகத்தச்சியிலும், தற்காலிகமும் மயங்கி **அங்கும்! இங்கும்! எங்கும்!** ஏகமாய் ஸ்ரீமகவானிருக்கிறனே என்பதை மறந்து சொல்லி அபசாரத்தையும் வினை பெருக்கத்தையும் பெருக்கிக் கொள்கிறார்கள் ஐயோ பாவம். இருந்தும்.

கற்பனையால், எப்படி **"அநுபவிக்கிறானோ"** அப்படியே இவன் **"வாக்கும்"!** அதைச்சார்ந்து **"வர்ணனை"**யும் வருகிறது என உணர்வாயாக.

இதுவும் இவன் குற்றமில்லை. இவனுடைய **பழக்க** (பேச்சு) **வழக்க** (செய்கை) என்றே சொல்லுவோம். தோஷ குற்றமாகும்.

தன்னைப் போல் பிறரையும் நேசியுங்கள் என்றார்கள். தன்னைப்போல் தெய்வத்தையும் பார்! என இவர்கள் ஆக்கிக் கொண்டார்கள். பாவம் இது கலியின் விளையாட்டே.

இவனுடைய **"காம/மோஹ/லோப லீலா!"** விநோதமே, இன்றைய கலியுக ஸ்ரீமஹான்களின் வாக்கும்! வரியுமாக இருக்கிறது. (இருக்க வேண்டும்)

இது இவர்கள் குற்றமில்லை. கலிதோஷ விதியாகும்.




36

ஓர் அறையில் ஜன்னல் கதவுகளையும் பூட்டி திரையையும் போட்டுக் கொண்டு யாரும் நம்மை பார்க்கவில்லை என எண்ணி தவறு செய்வது போல் இவர்கள் தவறு நடைபெறுகிறது. நம் முன் நாமாய் அவனே இருக்கிறான் என்பதை மறந்து விடுகின்றனர்.

வைத்தியம்:- ஓம் ஐயனே! இந்த ஸ்ரீமஹான்கள்! என சொல்லக் கூடிய, கலியுக பண்டிதர்கள் புராண, இதிகாச கதைகளையும்! மற்றும் தேவ தெய்வங்களின், வரலாறுகளையும்! லீலா! விநோதமாக சொல்லும் போது, காம! களியாட்டமாகவும்! மோஹ போஹ ரஸனையோடும்! விரக தாபத்தோடு! பிரஸங்கிப்பதும்! வரிவடிவ புஸ்தகம் எழுதுவதும்! கவனிக்கும் போது, இவர்கள் அனுபவம் தான் அப்படி வருகிறதா? அல்லது இது மஹாமாயாவின்! காரியமா?? அல்லது கலியின் பிரவர்த்தியில் இப்படித்தான் இருக்க வேணுமென்ற, நியதியின் விதியா??

இதை சற்று விளக்கியருள வேண்டும் மஹா தேவா? ஆன்ம சாதகர்களுக்கும், குடும்பஸ்தர்களுக்கும் இக்கேள்வி, தேவைப்படுகிறது? சிரமத்திற்கு மன்னிக்கவும்!



கலியுகத்தில் கலியுக விளையாட்டு நடைபெற வேண்டுமோ? தேவாதயவந்கள் விரோதம்! குரோதம்! வஞ்சகம்! சூழ்ச்சி! பொய்! காமக் களியாட்டம்! என்றும் இருமை உண்டென்றும் அவர்களிடமும் காதல்! போதை! மோகம் உண்டென்றும் தொடரும். (37)

ஸ்ரீ பரமன் :- இது நல்ல கேள்வியாயா! மேலும் இது, மிக, மிக, மிக, மிக அவசியமான கேள்விதான்? இந்த கேள்வியை, எம்மிடம் (ஸ்ரீபகவானிடமே) கேட்கிறாயே? இது ஓர் **உண்மை** பக்தனிடம் கேட்கும் கேள்வியாகும். நீயும் எம் நேசியாவ் ஓர் பக்தன் தானே? உனக்கு தெரியாத விளக்க மறியாம் சொல்லவா போகிறேன்?

வைத்தியம் :- எம் பிரபுவே! இந்த ஏழை வைத்தியத்தை, மன்னிக்கவும். யாம் உம் பக்தனாக இருந்தாலும்,

**தாசானு தாசன் தானே?**

அதாவது **பக்த ஸ்ரீபாத சேவாதுறையின் தாசிதானே?** அந்நிலையில், யாம் ஜீவ அணு தானே? அது செயல்படாத ஒன்று தானே? செயல்படுத்துவது தாங்கள் தானே? வேதங்களோ! உம் மூச்சுக்காற்று. அப்படியானால், வேத நாயகன் தானே விளக்க வேண்டும்? இந்த ஏழை சொல்வதைவிட தாங்கள் சொல்வது தான், உசிதம். கருணை சாயுங்கள் பிரபோ?



புராண இதிகாச
கதைகளையும் (38)
ப வேணுமென்றாலும்.
அப்படி படிப்பதில்
சாமான்யன் படிப்பி
றால் நம்பிக்கை வராது
என்ற நம்ப எண்ணத்
தினால் பண்டிதர்களும்!
வேதவாதிகளும்! மடாதிபதிகளும்!
தொடரும்.

ஸ்ரீபரமன் :— ஹே தாஸனு தாஸபாபா! எம் பணியின் பாபாவே! உன்னிடம் பேசியதில், செய்ய முடியாதுதான். ஒன்றென்றால்! உன் வாக்கு **பரஒலியாகும்!**

அது கீழ் இறங்க முடியாதுதான். இக் கேள்வியின் பதில், உனக்கு தேவை இல்லை. உன் குழந்தைகள்! நிமித்தமாகவும்! மற்றும் பக்தான குடும்பஸ்தர்களுக்காகவும்! தேவைதான். குழந்தைகளே கவனம் தேவை!

உன் கேள்வியை மூன்றாக பிரிக்கிறேம்.

(A) மஹாமாயா வின் காரியமா?

(B) கலியின் நியதியின் விதியா?

(C) கலியுக பண்டிதர்களின் அனுபவமா?

இனி பதில் கேளுங்கள்.

(A) மஹாமாயா வின் காரியமா?


பதில் :— **மஹாமாயா!** எனச் சொல்லும், யோகமாயாவின் காரியம் **மஹத்!** சிருஷ்டியாகும்.
யோகமாயா வின் காரியம் **ஜகத்!** ,,



பீடாதிபதிகளும்! (39)
ஆஸ்ரம வாஸிகளும்
இ குருமாரும்!
வாக்கால் வாக்கியும்;
வரியால் வாக்கியும்; பரவிநவிதான்;
தொடரும்.

இவ்விரண்டும், முறையே நிர்க்! குணமும், ரஜ (ஸத்வ) குணமும் உடையதே யன்றி, தீழ் (தாக்) குணநிலைக்கு இறங்குவதில்லை. விஷ்ணு மாயாவின், அம்சம் "மாயா! மனம்!" ஆகும். இதுவே அனைத்து குணங்களையும் உடையதாகும். இக்குணங்களானது, இக் கலியுகத்திற்கு, மட்டும், இறங்கி விளையாடும். மற்றைய மூன்று யுகங்களிலும், ஆண் பெண்! சேர்க்கையின் சிருஷ்டி, இல்லாதிருந்தது. இக்கலியுகத்தில் மட்டும், ஆண் பெண்! சேர்க்கை சிருஷ்டியும்; அது சம்பந்த காமம்! மோஹம்! லோபம்! வேக! காமக்களியாட்டங்களின் காரியமே நாமரூப, ஜக ஜீவ, தோற்ற இயக்கமாக இருக்க வேண்டும் என்பதே, நியதியின் விதியாகும்.

ஆகவே இதை, விஷ்ணுமாயாவும் & மனமும். இணைந்து நடத்தும், காரியமென உணர வேண்டும்.



தேவ தெய்வங்
களின் மகிமையும் (40)
மரியாதை குறையும்
என்றும், அதனால் உள்
ஆழ்ந்த பக்தி சுத்தமானதும்
என்றும், கலியுக சிறு
வழிபாடு பெருகும்.
தேவதை
என்ற நல்ல எண்ணத்தால் நடைபெறுகிறதென்று
உணர்ந்தால் போதும்.

(B) கேள்வி:- கலியின் நியதியின் விதியா?

பதில்:- இதை "ஆம்" என்றே ஒப்புக்கொள்கி
றோம்.

காரணம் என்னவென்றால்?
கலியுகத்தின் இருப்பிடமே "பெண்" "பொன்"
ஆகும். இவ்வாறெனில், எப்படி விளையாடும் என்றால்?
"படிப்பு" (பாடம்) "பட்டம்", "பதவி"!
இவைகளில் நான் முந்தி, நீ முந்தி என, வேத
தாயத்தோடு "போட்டி" "பொறாமை"!
களிறவு "காமம்"! களியாட்டம் ஆடவேணுமென்றும்;
இதில் நாமருபமுள்ள (சூட்சும) தேவதெய்வங்களையும்
பின்னி, பிணைந்து விளையாடி வைத்தான், "கலியு
க"!
காலத்தில், ஸ்ரீபகவத் பக்தி சுத்தமாகி
கெடும் என்றும், அதர்மம் மேலோங்கி வழிபாடும்
என்றும், திட்டமிட்டபடி நடைபெறுகிறதென்று
உணர வேண்டும்.
இது கலியுக விளையாட்டாகும்.



41

மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், ஆஸ்ரம சந்நியாசிகளும், ஸ்தாபனத்தையும், ஸ்தானத்தையும் தான் பெருக்கவும், நிரந்தரமாய் இருக்கவும் என்ன செய்ய வேண்டுமோ

தொடரும்.

இதில் ஒன்றொரு முக்கியம், என்னவென்றால்?
தேவ தெய்வ "வழிபாடு" குறைந்தால்தான்
சிறு காவல் தேவதை "மேலோங்கும்" என்ற
கலியுக "தோஷ" கருத்து நிறைவேறிக் கொண்டிருக்கிறதென்று உணர்வறியாக.
இது "காலத்தின்" கோலமேயன்றி,
வேறு எவரும், பொறுப்பாகார். இதுவே உண்மை.

(உ) கேள்வி :— கலியுக பண்டிதர்களின் அனுபவமா?
பதில் :— இது முக்கியமான ஒன்றாகும். எப்படியென்றால்?
இக்கலியுகம் "கலிபுருஷனுக்கே" உரிய காலமாகும். ஆகவே மாந்தர் அனைவரும், "கலி" புருஷனாகவே இருக்க வேண்டுமென்பதே விதி.
"காம காஞ்சன" (பெண்ணாசை பொன்னாசை) ஆசைகளை எவரும் மீறவும், மீளவும் முடியாது.
ஆனால்?



இ அதை செய்யும் கருத்துடையவர்களாக இருக்கிறார்களே யன்றி ஸக்தி யுக்தைஞா பிக்க வந்த நாம்! (42)

என்ன செய்து கொண்டிருக்கிறோம்? தொடரும்.

"உள்" உணர்ந்த "பக்தியும்! "உள்" ஆழ்ந்த "ஞானமும்"! உள்ள பக்குவ ஆன்மா எவரோ, அவரை இக்கலி கோடி கோர குணங்கள்! பற்ற முடியாது! பற்ற கூடாது!! பற்ற இயலாது!!!

இந்த ஸ்ரீமஹான்களிடம், பாடம் படிப்பு இராது.

உள் ஆழ்ந்த கல்வியும்! உயரிய ஒழுக்கமும்!

அவஸ்யம் உண்டு.

மற்றும் வேதாந்த! வேத! ஸாஸ்திர! பாடங்கள்!

"விளம்பர வியாபார"! நிலையில், "வேதன்"க்காகவே சாதனைக்கு அவ்வ படித்துள்ள, பண்டிதர்களிடம் நான் என்னுடைய தனி

மேலே கூறிய, நாமதிகாரீசனம்! நிறைந்திருக்கும்.

இவ்விரண்டும் நிறைந்த தன்மையால், இவர்களிடம், உள் உணர்ந்த பக்தி! இருக்க முடியாது! இருக்க இயலாது!!



பட்டம் பதவி

உ

என்பதை நம் (43) **கலி** புருஷன் பொன்னையும், பெண்ணையும் காட்டி மயக்கி மறக் கடித்துவிட்டான் என்றே சொல்ல வேண்டும். ஆகவே இது இவர்கள் குற்றம் இல்லவே இல்லை. நம்முடைய கலிபுருஷனுடைய சாமர்த்தியம் என்றே சொல்ல வேண்டும் முடிந்தது.

பட்டம் பதவி

↑ போட்டி பொறாமையால் "**காஞ்சன**" ஆசையும்,

"**பழக்கவழக்க**"த்தால் (பேச்சு) (செய்கை) "**காம**" ஆசையும்,

பெருகவே இருக்க வேணுமென்று "**கலியுக விதியின் நியதி**" இருக்கிறதென்று உணர வேண்டும்.

ஆகவே இன்றைய, கலியுக ஸ்ரீமஹான்களின் → **த்**

காஞ்சன ஆசையால் "**பிரவர்த்தி**" என்ற நிலையில், "**ஸ்தாபன விரிவை**" செய்கிறார்கள்.

அகந்துறவின், உணர்வைப் பெருக்குவதில்லை.

காம ஆசையால், நாம் **கெட்டுப் போனோம்**,

நிலையால்; நமக்கு வழி காட்டிகள், தேவ தெய்வங்கள், என சொல்லிக் கொண்டு, மமதைய கர்வயால்,



மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், ஆஸ்ரம சந்நியாசிகளும், மடத்துக்கும்! பீடத்திற்கும்! ஆஸ்ரமங்களுக்கும் தான் **அதிபதியாக** இருக்கிறார்களே யன்றி; தொடரும். (44)

தேவ தெய்வங்களின் கதைகளையும் மாற்றி,

அதாவது?

தேவ தெய்வங்களும் "**இப்படி**" இருப்பதால், "**நாமும் அப்படியே**" இருக்க வேணுமென்று,

உதாரணம்:— சிவன், விநாயகன், முருகன், ஐயப்பன், நாராயணன், ஆகிய இவர்களே இரண்டு "**மனைவிகளுடன்**", கொஞ்சி குலாவி விளையாடும் போது, "**நாம் ஏன்?**" பல பெண்களின் தொடர்புடன் கூடாது இருமனைவிகளுடன் வாழக் கூடாது?????????? என்ற கேள்விகளுடன், காமக் கேளிக்கைகளுடன்; ஈடுபடுகின்றனர்.

வைத்தியம்:— ஹே பரமேஸ்வரா, பராத்பரா, பக்தவத்ஸலா! பதிதபாவனா, பரம் பொருளே, இதை விட வேடிக்கை என்னவென்றால், எம் கண்ணனுடைய, "**ராஜ கிரீடை**" "**ஜலக்கிரீடை**", என்ற, கோப, கோபிகா, பக்த ஆனந்த விளையாட்டையும்,



உனக்கு உலகும் அதிபதியாக (45)
விரும்புவதும் இல்லை.

விரும்ப இயலவும் இல்லை. காரணம்?
கலியின் பராசக்தியாகும் கொடுத்தும்

"ஜீவாத்மா & பரமாத்மா!"
"ஐக்கிய!" பேரானந்த விளையாட்டு என,
(ஆண் & பெண்)
காரணம் வீ உணராமல் "காம ரஸத்துடன்!"
பிரசவிக்கப்படுவதும்! புவிதனில் வெளியிடுவதும்!

மக்களிடையே பரப்புவதும், இதனினும் மேலாக,
"ராதா & கிருஷ்ண!" சொரூபத்தை!
"குரு & சிஷ்யை!" யாக நோக்காமல்,

கணவன் & மனைவியாகவும்! காதலன் & காதலியாகவும்!

பாவனை செய்து பிரஸவிக்கப்படுவதும், அந்த விதானத்தை,
"ராதா கல்யாணம்!" என விமரிசையாகக்
கொண்டாடியும், ஸ்ரீ சிவனுக்கு உமக்கு, அனேக கற்பனை
கட்டுரை, புராணக்கதையும் அதில் காம ரஸனையையும்!
அக்கத்தி தெய்வ புனிதத்தை கெடுத்து



ஸ்ரீ ரமணர்

உடனே! (46)

விருத்தியைத் தான் செய்கிறார்களே யன்றி; உதயத்தில் இருப்பவனை (ஸ்ரீ பகவானை) மறந்து விட்டார்கள் என்பதே ஸத்தியம்.

தொடரும்


தானும் கெட்டும் போகிறார்களே பிரபோ! இவர்களுக்கு, இனி விமோசனமே இல்லையா பிரபோ? அனுமார் வாலில் தீ வைத்த அசுரர் கூட்டம் அந்த அக்கினியாலே, அழிந்தது போல், தாங்களுடைய தேவ தெய்வங்களுடைய "நாம ரூபங்களை" தூஷித்து அவமதித்து அவர்கள் கர்மாவைப் பெருக்கி, அழிவைத் தேடிக் கொள்கிறார்கள் இவர்களுக்கு விமோசனமே இல்லையா பிரபோ? ஸ்ரீ ரமணர்:— (கல கல கல கல கல கல வென சிரித்து விட்டார்) ஹே கர்மம், கபடு, சூது, வாதில் வாத குழந்தை பாபா! நல்ல கேள்வியையே கேட்டாய்! நீ ஒருவன் அம்சமானவன்! அதன் அம்சமாகவே வந்தவன். ஈஸ்வராதிகளாய் போல், "தர்மத்தை" ஸ்தாபனம் பண்ணு! அதன் மேல் "அத்வைதத்தை" நிலை நிறுத்த வந்தவன். ஆகவே "அறிவு!" சொரூபமான இந்த வார்த்தை வருகிறது. உன்னிலும் அருகதை இல்லை உள்ள தெய்வ அம்ச



47

இவர்கள் மறைத்த விவிலியம் எம் கலி புருஷனவன். இவர்களுக்கு போகத்தையும் மோகத்தையும்! காம வேகத்தையும் காட்டி மயக்கிவிட்டான் என்பதே ஸத்தியம்.

ஸ்ரீமஹான்களிடமும்! இதை காண்கிறோம். வேறு எவரிடமும் இந்த "தர்மம்" இல்லையென்பதே ஸத்யம்! உன் குழந்தைகளுக்காக, இதை சொல்கிறோம். கவனமாக கேள்: மனம் என்றால் "குணம்!" அக்குணம் கோர தோஷமாக மாறுவதும் மாற்றுவதும்! "கலி" புருஷனின்! விளையாட்டாகும். அக்கலி! தாம் விளையாடுவதற்காக, இரு இடங்கள் வைத்திருக்கிறான். அவை பொன் (பணம்) ஆகும். பெண் (காமக்களியாட்டம்). இவ்விரண்டையும், இடம், சமயம் கண்டு அறிவது, அவன் சாமர்த்தியமாகும். இதை மக்களிடையே பரவச்செய்வது, அவனால் இயலாத காரியமாகும். இம்மக்களின் மனதில் இடம் பெறுவது! "இறை & குரு"! ஆக இரண்டாகும். இறைவன் ஸூட்சமம்! ஆகவே அவனைத் தொட முடியாது. குரு தூலம்! ஆகவே அவனை தொட முடியும்.



இச்சையையும் 48
அதாவது ஆசை
யையும்! கிரியையையும்
அதாவது கர்மாவையும்,
தம்முள் அடக்கிக்
கொண்டு **ஞானப்**
பிழம்பாய் (பழமாய்)
ஸ்ரீ வடிவமாக இருப்பவரே **ஸ்ரீமுருகன்!**
தெய்வம்.

கலியின் தோஷ குணங்கள், பரவுவதாக இருந்தால்
அங்கு "**குரு**" (இருக்கும்) வேண்டும். அக்குரு
இறைவனிடம் இல்லை. ஆனால் குருவிடம் உண்டு.
ஆகவே "**குருமேவமாக**"! அவ்விரண்டையும்!
பரவச் செய்வது, கலிபுருஷனுக்கு தை வந்த கலி
ஆகவே? ஆகும்.

குருமார்களிடம்!

(A) பாடம்! படிப்பு! பட்டம்! பதவி! அந்தஸ்து!
கௌரவம்! இவைகளின் மோகத்தை காட்டி!
இதை அடைய, தேவதையான **பணம்** (மண்ணை) (பொன்னை)
காட்டி "**போட்டி பொறாமையில்**"!
ஆழ்த்தி விடுகிறான். ஆழ்த்தி விட்டான்.

(B) குருமார்களிடம்! அவர்கள், தேவ தெய்வ, நம்பிக்கை
உடையவர்கள் ஆகையால், அக்குருமார்களுக்கு "**மோக**
சொன்னவைகளில் **மோகத்தை**!" (உண்டென்னி)



உ

சிந்தனையும் புத்தியையும் தம்முள் அடக்கிக் கொண்டு "தாம்" "தானே" பிரம்ம சொரூபியாய் எங்கும் சர்வ வியாபகமாய் இருப்பவனே ஸ்ரீவிநயகன் ஆகும் என்றும்.

(49)

அவர்கள் "வாக்கு & வர்படிவ"!

புராண & இதிகாச கதைகளை "புதுமையுடன்"!

புதுப் பொலிவுடன் நிகழும் கலியினை, பெருகச் செய்து! தெய்வத்தை சுட்டிக்காட்டினேன் தானே?

நாம் காம, மோக, லோகத்துடன் வாழ்வோம். என்ற ஓர் (பாதக கருத்தை) "உன்னத கருத்தை"! புகுத்தி, தேவ தெய்வங்களே, இப்படித்தான் இருக்கிறார்கள். ஆகவே நாமும் அவ்வாறு இருந்தாலும், நடந்தாலும், "தோஷமில்லை"! என்ற கருத்தை, நம்மிடையே புகுத்தி "தாமும்" கெட்டு "நம்மையும்"! கெடுத்து விட்டார்கள்

என, உன் குழந்தைகளுக்கு, சொல்வாயாக என எம் ஸ்ரீராமன் சொல்லி முடித்தான்.



உ

இவ்விருவருக்கும் 60 மணிவிழா என்று பெயரில் இரு பெண்களை வைத்து தானும் கெட்டு ஜனங்களையும் கெடுத்து விட்டார்கள். இது இவர்கள் குற்றமல்ல! கலியின் மகிமையாகும் முடிந்ததும்.

ஓம் ஆதிமானந்த குழந்தைகளே!

இதை உணரவும்:- "தேவதெய்வங்களை" நாம, வேறு, வாழ்க்கையில், ஒப்பிட்டு; அங்கு "நம்மையும்" ஒப்பிட்டு பார்க்கும் போது, என்பதுயுகயுக அது மஹா அபசாரமாக முடியும். ஸ்ரீமஹான் "நூல்"களின் கருத்தாகும். அப்படிப்பட்ட "நூல்"யும் படிக்க வேண்டாம். அப்படிப்பட்ட "கதை"களையும், கேட்க வேண்டாம் என, உங்கள் பாதம் பற்றி வேண்டிக் கொள்கிறேன். "சமர்ப்பணம்" முறையாகவும்! இடைவிடாமலும்! "அனுபவம்" கூடி வந்தால் இந்த வருகை நடைபெறுவது உண்மை, "அவன் பார்த்துப்பான்!" இது.

ஸத்தியம்! இது ஸத்தியம்! இது ஸத்தியம்!!!

இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!

பாபா.

எல்லாம் ஒன்றே!

அது சிவமே! அது ராமே! அதுவே நீங்கள்! இது ஸத்தியம்.




Abode of Love

You Are Everything!